DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 61/2023

Miscellaneous :

Sessions : PW 2

Deposition of Witness for

**எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | ரவி |
| Father / Husband Name | ராஜேந்திரன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 12.11.2024

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது சென்னை பல்லாவரத்தில் குடியிருந்து மெக்கானிக்காக வேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன சசிக்குமார், தாமோதரன், ஏழுமலை, கோகுல்தாஸ், சந்திரசேகர் ஆகியோரை தெரியும். தேதி மாதம் ஞாபகம் இல்லை. சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்பு வீட்டில் இருந்து நானும் என்னுடன் சதிஷ், சசிக்குமார், தாமோதரன், ஏழுமலை, கோகுல்தாஸ், சந்திரசேகர், அய்யனார் ஆகியோர் மகேந்திரா வேனில் திருவண்ணாமலை கிரிவலத்திற்கு சென்றுவிட்டு வரும்போது மதுராந்தகம் அருகே பின்னால் இருந்து வந்த லாரி வாகனம் எங்கள் வாகனத்தில் மோதி விபத்து ஏற்பட்டது. லாரி வாகனம் மோதி முன்னால் சென்ற பெரிய லாரியில் மோதி அதன் அடியில் மாட்டிக்கொண்டது. நான் மயக்கம் அடைந்துவிட்டேன். எனக்கு 2 கால்களும் உடைந்துவிட்டது. நான் ஒன்றரை மாதம் சிகிச்சை பெற்றுவந்தேன். சதிஷ்-க்கும் காயம் ஏற்பட்டது. மற்றவர்கள் 108 ஆம்புலன்ஸ் மூலம் செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சிகிசைக்கு சேர்ந்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. நான் விபத்து சத்தம் கேட்டுதான் பார்த்தேன் என்றால் சரிதான். நான் விபத்தில் மயக்கம் அடைந்துவிட்டேன். விபத்து குறித்து எனது உறவினர் தான் போலிசாரிடம் விவரம் சொன்னார்.